கவில் ஆனாலும் சரி, அதைப் பார்வையிட நேர்ந்தால், எந்த நேரமும் அதைப் பார்வையிடலாம். அவ்வாறு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு வந்து அதைப் பார்வையிடுமா? அவ்வாறு அந்தக் குழு பரிந்துரை செய்தால் அப்பொழுதாவது இந்தச் சாக்கடை நீர் குடிநீர் பெறப்படும் தண்ணீரில் கலக்காமல், வாட்டர் பொல்யூஷன் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, உறுப்பினருடைய கருத்துக்களை அரசு கருத்தில் எடுத்துக் கொள்ளும்.

லிக்கோடெர்மாவுக்கு மருத்துவம்.

* 9026 திரு. செங்கை சிவம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) லிக்கோடெர்மா வில் டிலில் என்னும் சருமநோய் தாக்கியுள்ளவர்கள் நிவாரண மருந்தான மெல்ஜினினா லோஷனை அதிக விலையில் வாங்க முடியாமல் உள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இம்மருந்தினை உள்ளூரில் தயாரிக்கவும் நியாயமான விலையில் விற்கவும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம், இந்த மருந்து இச்சரும நோய்க்கு முழுமையான பலனளிக்கக்கூடிய மருந்தாக அமையவில்லை. மேலும் இந்த மருந்தின் தொழில் நுட்ப விவரங்கள் சரிவரக் கிடைக்காத காரணத்தினால் இந்த மருந்தினை இந்தியாவில் தயாரிக்க முடியாமல் உள்ளது. எனினும் இதற்குச் சமமாக பலனளிக்கக்கூடிய மாற்று மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதிலும் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

9–55 மணி

திரு. செங்கைசிவம் : தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள ராம் மனோகர் லோகியோ மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பேராசிரியர் எஸ்.கே. சர்மா 18–9–1989 ஆம் நாளன்று 'பைனான்சியல் எக்ஸ்ப்ரஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்து இருக்கிற பேட்டியில் 'லிக்கோடெர்மா' வியாதிக்கு கியூபா நாட்டில் மருந்து தயாரிக்கப்படுகிறது என்றும், 'மெல்ஜினினா' என்ற மருந்து தான் சிறந்தது என்றும், அதில் 100-ல்

71 நோயாளிகள் பூரணமாக குணமடைந்துள்ளனர் என்றும் கூறியுள்ளார். அந்த நோயால் இந்தியாவின் இரண்டு கோடி பேர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; தமிழ்நாட்டில் ஆறு இலட்சம் பேர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த வியாதிக்கு இந்தியாவில் சரியான மருந்து இல்லாத காரணத்தால் கியூபா நாட்டிலிருந்து அரசு அங்கீகாரத்தோடு சிம்கோ என்ற நிறுவனம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அமைச்சருக்குச் செய்தி சொல்கிறீர்களா, அல்லது அமைச்சரிடமிருந்து விடை எதிர்பார்க்கிறீர்களா?

திரு. செங்கைசிவம் : தலைவர் அவர்களே, சிம்கோ நிறுவனம் இறக்குமதி செய்து விநியோகிக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் நாட்டில் அந்த மருந்து சுலபமாக கிடைக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, 'லிக்கோடெர்மா' என்ற வியாதி முழுவதுமாக குணப்படுத்த முடியாத வியாதி என்று வகைசெய்யப்பட்டுள்ள வியாதியாகும். அதற்கு இந்தியாவில் பல்வேறு மருந்து வகைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குறைந்த விலையில் அவைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.
Maxsolara Lotion, Monoderm ointment Neuosoralens ointment, Lonosil ointment.

போன்ற பல்வேறு மருந்துகள் இதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகள் எல்லாம் இந்தியாவில் தயாரிக்கப்படுகிற மருந்துகள் ஆகும். யாரோ மருத்துவர் சொன்னதாக குறிப்பிட்டார்கள். மருத்துவர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் இருப்பது என்பது மருத்துவ உலகில் இருக்கிற நிலைமைதான். அவைகள் முழுவதுமாக ஆய்வு செய்யப்பட்டு இந்த வியாதியை முழுவதுமாக குணப்படுத்தமுடியும் என்று ஆராய்ச்சி நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டால் அந்த மருந்தை இங்கே கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : தலைவர் அவர்களே, இந்த வியாதியால் ஆறு லட்சம் பேர் தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திருமண வயதுடைய பெண்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். இது கியூபா நாட்டில் மூன்று டாலருக்கு விற்கப்படுகிறது. இந்தியாவில் 260 ரூபாய்க்கு விற்கிறார்கள். மேலும், இந்த மருந்து தயாரிப்பதற்குத் தேவைப்படும் மூலப்பொருள்—human placenta

1990 ஏப்ரல் 5]

அதாவது மனித சேய் இணைப்பு திசு. இந்த மூலப் பொருள் தமிழ் நாட்டில் மிக அதிகமாக கிடைக்கிறது. ஆகவே, ஒரு டாக்டர் குழுவை கியூபா நாட்டிற்கு அனுப்பி, மருந்து தயாரிப்பு முறையை அறிந்து வரச் செய்து, தமிழ் நாட்டில் அந்த மருந்தை தயாரித்து மிகச் சுலபமாக விற்பனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இந்த மருந்தின் பலன் குறித்து இன்னமும் முழுமையாக அறிஞர் குழுவால் முடிவு செய்யப் படாத நிலையில், அதுபற்றி ஆய்வு செய்கிற செயற்குறிப்பு அரசிடம் இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால், அது முழு மையாக குணப்படுத்தும் என்று அறிஞர் உலகம், மருத்துவர் உலகம் ஏற்றுக்கொள்ளுமானால், அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

பணியில் இருக்கும்போது மரணமடைந்து விடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி.

*1006 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணியில் இருக்கும்போது மரணமடைந்துவிடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி வழங்குவதில் திருமணம் முடிந்த பெண்களுக்குப் பாரபட்சம் காட்டக் கூடியவகையில் அரசு ஆணை அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குறையை நிவர்த்திக்க அரசு மேற் கொள்ளும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி மணமாகாத பெண்களுக்குத்தான் கருணை அடிப்படையில் வேலை கொடுக் கப்படுகின்றது.

(ஆ) இப்பொருள் குறித்து தற்பொழுது அரசின் பரி சீலனையில் ஏதுமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அரசுப் பணியில் இருக்கிற நேரத்தில் மரணம் அடையும் அரசு ஊழியர்களுடைய வாரிசுகளுக்கு வேலை அளிக்க வேண்டும்